# DEPOSITION OF WITNESS.

## IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, KARUR

## S.C. No. 56/2023

## PROSECUTION WITNESS - CW1

| | | | |
|---|---|---|---|
| **Name** | : பிரபு | **Caste** | : |
| **Father Name** | : | **Calling** | : |
| **Village** | : | **Religion** | : |
| **Taluk** | : | **Age** | : |

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 04th day of March 2026.**

(1ம் எதிரி சக்திவேல், 2ம் எதிரி செல்வகுமார், 3ம் எதிரி ரஞ்சித்குமார் ஆகிய 1 முதல் 3 எதிரிகள் ஆஜராகியுள்ளார்கள். 1 முதல் 3 எதிரிகள் தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜராகியுள்ளார்கள்.

(குழந்தைகள் மற்றும் சாட்சிகள் விசாரணை மையத்திலிருந்து சாட்சி விசாரிக்கப்படுகிறார். எதிரிகள் திரைமறைவில் அமர வைக்கப்பட்டுள்ளனர். சாட்சி தனியறையில் அமர வைக்கப்பட்டு, திரை விலக்கப்பட்டு, விசாரணை கீழ்க்கண்டவாறு தொடரப்படுகிறது)

மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையின் உத்திரவு Crl.O.P.(MD) No.560 of 2025 நாள் 22.01.2025 சாட்சிகளை விசாரணை செய்ய உத்திரவிடப்பட்டு அதனடிப்படையில் சாட்சிகள் விசாரிக்கப்படுகிறார்.

**<u>முதல் விசாரணை :</u>**

நான் தற்போது ஓடாபோன் நிறுவனத்தில் நோடல் ஆபிசராக 2023 ஆண்டிலிருந்து தற்போதைய தேதி வரை பணிபுரிந்து வருகிறேன்.

நீதிமன்றத்திலிருந்து 7639283925, 9787960753 மற்றும் 9003635299 ஆகிய எண்களுக்கு 01.09.2022 தேதியிலிருந்து 30.09.2022 தேதி வரையில் உள்ள காலகட்டத்திற்கான கால் டீடெய்ல்ஸ் விவரங்கள் கேட்டு கடிதம் பெறப்பட்டது. அந்த கடிதம் 09.02.2026 தேதியில் பெறப்பட்டு நான் மேற்சொன்ன எண்களுக்குரிய மேற்சொன்ன காலகட்டத்தில் கால் டீடெய்ல் ரெக்கார்ட்ஸ் எங்கள் நிறுவனத்தில் இல்லை என்று சான்று அளித்துள்ளேன். **நான் வழங்கிய சான்று இதுதான். அது நீ.ம.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**<u>1 முதல் 3 எதிரிகள் தரப்பில் பொதுவான குறுக்கு விசாரணை</u>**

உங்கள் நிறுவனத்தில் உங்களுக்கு அலுவலக ரீதியாக கொடுக்கப்பட்டுள்ள இ–மெயில் ஐடி prabhu.p@vodofoneidea.com என்று சொன்னால் சரிதான். மேற்சொன்ன மெயில் ஐடி–க்கு 28.08.2025 அன்று selva.kanna@gmail.com என்ற மெயிலிருந்து உங்களுடைய மெயிலான prabhu.p@vodofoneidea.com என்ற மெயிலுக்கும், customercare@vodofone.com, மற்றும் nodalofficer@idea.com ஆகிய மெயிலுக்கு அனுப்பப்பட்டதா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. prabhu.p@vodofoneidea.com என்ற எனது அலுவலக மெயிலுக்கு நீதிமன்றத்திலிருந்தும், காவல்துறையிலிருந்தும் மெயில் வந்தால் தான் நான் பதில் கொடுப்பேன் தனிப்பட்ட முறையில் வரும் மெயில்களுக்கு நான் பதில்கொடுக்கமாட்டேன். தனிப்பட்ட நபரின் கஸ்டமர் டீடெய்ல்ஸ்யை தனிப்பட்ட நபருக்கு கொடுப்பதில்லை

நீதிமன்றத்திற்கும் காவல்துறையினருக்கும் தான் கொடுப்போம். நீதிமன்றத்திலிருந்து பாதுகாப்பாக வைக்கும்படி கூறினால் அதை டவுன்லோடு செய்து பிரிண்ட் அவுட் எடுத்து நாங்கள் பாதுகாப்பாக வைப்போம். அதேபோல் காவல்துறையினர் மற்றும் நீதிமன்றத்தில் கேட்டாலும் டவுன்லோடு செய்து பிரிண்ட் அவுட் எடுத்து நாங்கள் பாதுகாப்பாக வைப்போம். டவுன்லோடு செய்து உடனே பிரிண்ட் அவுட் எடுத்து வைத்து விடுவோம். நீ.ம.சா.ஆ.3 ஆவணம் உங்களால் பொய்யாக கொடுக்கப்பட்ட ஆவணம் என்று சொன்னால் சரியல்ல. நீங்கள் உயர்நீதிமன்றமும், உச்சநீதிமன்றமும் கொடுத்த உத்தரவையும் மேலும் வழக்கறிஞர் மூலமும், தனிநபர் மூலமும் மேற்படி சீடிஆரை சேமித்து வைக்க வேண்டும் என்று கொடுத்த தகவலை மறைத்து விட்டு நீங்கள் தற்போது தவறாக சொல்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல. காவல்துறையினர் கேட்டுக்கொண்ட படி 7639283925 மற்றும் 9787960753, 9003635299 ஆகிய எண்களுக்கு ஏற்கனவே கால் டீடெய்ல்ஸ் விவரங்கள் கொடுத்துள்ளீர்கள் என்றும் தற்போது சேமித்து வைக்கவில்லை என்று பொய்யாக குறிப்பிடுகிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ELAVAZHAGAN

Digitally signed by ELAVAZHAGAN
Date: 2026.03.04 18:22:44 +0000

மாவட்ட அமர்வு நீதிபதி,
கரூர்.